# புதிய மின் இணைப்பு பெறுவதற்கான வழிமுறைகள்




மின் நுகர்வோர்க்கான சி.ஏ.ஜி யின் பிற வெளியீடுகள்

* மின் பட்டியலிடல் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை
* உங்கள் இணைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல்
* மின் அளவி தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை
* தரமான சேவையும் மற்றும் குறைதீர் முறைகளும்


CAG
Citizen consumer and civic Action Group

New #246 (Old #277B), TTK Road (J.J. Road ),
Alwarpet, Chennai 600 018 INDIA
Ph:044-24994458 / 24660387

**புதிய இணைப்பை பெற்றுக்கொள்வது எப்படி, அதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் என்னென்ன, இணைப்பை பெற்றுக் கொள்வதில் பொதுமக்களின் உரிமைகள் என்ன போன்ற தகவல்களை இவ்வெளியீடு விவரிக்கின்றது. இத்தகவல்கள் மூலம் நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.**

1. **புதிய மின்னிணைப்பு பெற நான் என்ன செய்ய வேண்டும்?**

- நியமிக்கப்பட்ட படிவத்தை பிரிவு அலுவலகத்திலிருந்து நீங்கள் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இப்படிவத்தை த.நா.மின்.வா.தின் இணைய தளத்தில் நுகர்வோர் சேவைகள், படிவங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் என்ற இணைப்பிலும் காணலாம், இணையதள இணைப்பு http://www.tnebltd.gov.in:8080/nsconline/
- பிரிவு அலுவலகத்தை அணுகி உங்கள் பகுதியிலுள்ள அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்தக்காரர்களைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்
- அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தக்காரர் மூலம் வீட்டினுள் மின்தொடர்களை அமைத்துக் கொள்ளவும்.
- கீழே குறிப்பிட்ட ஆவணங்களை நீங்கள் இணைக்க வேண்டும்:

**அ.** மின் வழங்கல் தேவைப்படும் இடத்தின் உரிமையாளர் நீங்களானால், சட்டப்படி இவ்விடத்தின் உரிமையாளர் நீங்கள் என்பதை நிரூபிக்க தேவைப்படும் தகுந்த ஆவணங்கள், பத்திரங்களை தயார் செய்யவும்.

**ஆ.** நீங்கள் பயன்படுத்தப்போகும் இடத்தின் உரிமையாளர் நீங்கள் இல்லையெனில் பின்வருபவற்றை சமர்ப்பிக்க வேண்டும் :

1. மின் இணைப்பைப் பெறுவதற்கு ஒப்புதல் கடிதத்தை இடத்தின் உரிமையாளரிடமிருந்து நீங்கள் படிவம் 2-ல் பெற வேண்டும்,
2. அந்த இடத்தில் சட்டப்படி நீங்கள் குடியிருப்பதற்கான ஆதாரம் (குத்தகை ஒப்பந்தம் அல்லது குடும்ப அட்டை போன்றவை) மற்றும் வழக்கமான வைப்புத்தொகை அளிக்க உத்திரவாத பத்திரம்

இந்த இரண்டு படிவத்தினையும் இணையதளத்தில் நுகர்வோர் சேவைகள், படிவங்கள் என்ற இணைப்பிலிருந்து பெறலாம்.

**இ.** புறம்போக்கு நிலத்திற்கு மின்னிணைப்பு கோருவதானால் "ஆட்சேபணை இல்லை" என்ற சான்றிதழை துணை தாசில்தார் நிலைக்கு கீழ் உள்ள அதிகாரியிடமிருந்து பெற வேண்டும்.

- விண்ணப்பதை பிரிவு அலுவலகத்திற்கு நேரிலோ, பதிவு தபால் மூலமோ அல்லது இணைய தளத்தின் மூலமாகவோ சமர்ப்பித்து ஒப்புதல் சீட்டை பெறவும்.
- புதிய இணைப்பிற்காக செலுத்த வேண்டிய பதிவு கட்டணங்கள்:

| **சேவை வகை** | **ஒரு இணைப்பிற்கான பதிவு கட்டணம் (ரூ)** |
|---|---|
| தாழ் அழுத்த கட்டணவீதம் I-A (உறைவிடம்)<br>அ. ஒரு முனை<br>ஆ. மும் முனை | <br>50/-<br>50/- |
| தாழ் அழுத்த கட்டண வீதம் IV (வேளாண்) | 50/- |
| தாழ் அழுத்த கட்டண வீதம் IB (குடிசை) | 5/- |

- நீங்களோ அல்லது உங்கள் பிரதிநிதியோ பொறியாளரை சந்தித்து மின் அளவியை பொருத்த ஏற்ற இடம் மற்றும் இதர ஏற்பாடுகளை முடிவு செய்ய வருமாறு ஒரு அறிவிப்பு உங்களுக்கு அனுப்பப்படும்.
- நீங்கள் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் (சுமார் 9 நாட்கள்) செலுத்த வேண்டிய கட்டணத்தை குறிப்பிட்டு ஒரு தேவை அறிவிப்பு வழங்கப்படும். இக்கட்டணத்தில் பின்வருபவை அடங்கும்:

a. உத்தரவாத வைப்புநிதி : குடிசை தவிர மற்ற ஒருமுனை இணைப்புகளுக்கு

b. மேம்பாடு கட்டணம் - உறைவிட வகை ஒரு முனை இணைப்பு ஒன்றுக்கு மேம்பாடு கட்டணமாக ரூ.400/-ம் மும்முனை இணைப்பு ஒன்றுக்கு ரூ.1400/-

c. மின் அளவியை நிறுவுவதற்கான கட்டணம் ரூ.250/- ஒரு முனைக்கும், மும்முனைக்கு ரூ.500/-

d. மின் அளவி எச்சரிக்கை நிதி : உறைவிட ஒரு முனை இணைப்புக்கு மின் அளவி ஒன்றுக்கு ரூ.700/-, மும்முனை இணைப்புக்கு மின்னளவி ஒன்றுக்கு ரூ.250/-

e. மின் கம்பி நீட்டிப்பு இருந்தால் மின்கம்பிகளுக்கான கட்டணம் சேர்க்கப்படும்.

**ஆதாரம்: தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை வாரியத்தின் உத்தரவு இலக்கம் 41 / 2003**

**குறிப்பு: இணைப்புகளுக்கு மதிப்பிடப்படும் கட்டணம்**

- கட்டணங்கள் பெறப்பட்ட பின் மின் இணைப்பு வழங்க வசதியாக நீட்டிப்பு பணிகள் முடிக்கப்படும்.
- நிர்மாணங்கள் முடிந்து விட்டன, சோதிக்கப்பட்டு விட்டன, பொறியாளர் அவருடைய ஆய்வையும் சோதனையும் நிகழ்த்தலாம் என தெரிவித்து பொறியாளருக்கு அறிவிப்பு அளிக்கவும் (தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் அலுவலகத்திலிருந்து சோதனை அறிக்கை படிவத்தினை இலவசமாக பெறலாம்).
- எப்பொழுது மின் வழங்கல் கிடைக்கும் என காலக்கெடுவை குறிப்பிட்டு உங்களுக்கு அறிவிக்கப்படும்.

**2. மின் அளவி எவ்வாறு பொருத்தப்பட வேண்டும்?**

பொருத்துவதற்கு, சோதிப்பதற்கு, பணி துவக்குவதற்கு பயனீடு கணக்கிடுவதற்கு, பதிவு செய்வதற்கு மற்றும் பேணுவதற்கு எளிதாக அடையும் வகையிலும், உங்களுக்கும் வாரியத்திற்கும் இடைஞ்சல் இல்லாத வகையில் உங்கள் இருப்பிடத்தில் மின் அளவி பொருத்தப்பட வேண்டும்.

உறைவிடத்தில் யாரும் இல்லாத சமயங்களில் மின் அளவு கணக்கிடப்படும்படி வழி செய்ய வேண்டும்.

பல மாடிக் கட்டிடங்களில், அதில் எத்தனை தளங்கள் இருந்தாலும், மின் அளவி மற்றும் அதன் துண்டிப்பு சாதனம் போன்றவை தரை தளத்திலேயே நிறுவப்பட வேண்டும்.

**3. மின் வழங்கலில் என்னென்ன வகைகள் உள்ளன?**

அ. 4000 வாட் அளவுக்கு மிகாத மொத்த இணைந்துள்ள சுமைகளுக்கு 2 கம்பிகளும், தறுவாய் நெதுமல் இடையில் 240 வோல்ட்களும் அமைந்த ஒற்றை தறுவாய் (Single phase) அமைப்பில் மின் வழங்கல் கிடைக்கும்.

ஆ. 4000 வாட் அளவுக்கு கூடுதலான மொத்த இணைந்துள்ள சுமையும், 112 கிலோவாட் அளவுக்கு மிகாத மின் தேவையும் உள்ள சுமைகளுக்கு, 4 கம்பிகளும் தறுவாய்களுக்கிடையில் 415 வோட்களும், தறுவாய் - நெதுமல் இடையில் 240 வோல்ட்களும் அமைந்த முத்தறுவாய் (Three phase ) அமைப்பில் மின் வழங்கல் கிடைக்கும்.

**4. ஒரு முனை இணைப்பை மும்முனை இணைப்பாக எவ்வாறு மேம்படுத்துவது?**

- நீங்கள் பயன்படுத்தும் சுமைகளை வகைப்படுத்தி, குழுவாக்கி, முத்தறுவாய்களிலும் சமமாக பிரிக்கவும் உதாரணத்திற்கு, உங்களிடம் குளிர்பதனப்பெட்டி, சுடுநீர் பாண்டம் மற்றும் குளிர் சாதனப் பெட்டி (3 கனச்சுமைகள்) இருந்தால், அதை முத்தறுவாய்களிலும் பிரிக்க வேண்டும்.
- மும்முனை இணைப்பிற்கு ஏற்றார் போல் மின் தொடர்களை மறு அமைப்பு செய்யவும்.
- மேம்பாட்டிற்கு கூடுதலாக கட்டணம் செலுத்த வேண்டும்.
- மேலும் உதவிகள் வேண்டிடின், உங்கள் பகுதி துணை பொறியாளரை (செயல் மற்றும் பேணுதல்) அணுகவும்.

**கூடுதல் வைப்பு தொகை**

உங்கள் மின் பளு அல்லது பயனீட்டு அளவு அல்லது கட்டண வீதம் அதிகரித்தால் உங்கள் வைப்பு நிதி அதிகரிக்கப்பட வேண்டியிருக்கும். அச்சமயங்களில் தனியான அறிவிப்பு மூலமாகவோ அல்லது பயனீட்டு கட்டண அட்டையில் தனியான குறிப்பு மூலமாகவோ இந்த கூடுதல் வைப்பு நிதி வசூலிக்கப்படும். இக்கட்டணத்தைச் செலுத்த 30 நாட்கள் வழங்கப்படும். செலுத்தத் தவறினால் மின் இணைப்பு துண்டிக்கப்படும்.

**5. புதிய இணைப்பைப் பெறுவதற்கும் மற்றும் அதன் பின் செலுத்த வேண்டிய கட்டணங்கள் யாவை?**

**மின்னிணைப்பு பெற, நீங்கள் செலுத்த வேண்டியவை:**

- பதிவுக் கட்டணம்
- காப்பு வைப்புத் தொகை
- மேம்பாட்டுக் கட்டணம்
- மின்னளவிக்கான காப்புத் தொகை

**இணைப்பிற்கு பின் செலுத்த வேண்டிய கட்டணம்**

**வழக்கமான கட்டணங்கள்**

- நிலையான கட்டணம்
- மின்சக்தி கட்டணம்

(மாதாந்திர குறைந்தபட்ச கட்டணத்திற்கு பொருந்தது)

**தனிக்கட்டணங்கள்**

- தாமத உபரிக்கட்டணம்
- கூடுதல் வைப்புத் தொகை

ஒப்பந்தம் துண்டிக்கப்படும் வரை ஒவ்வொரு இணைப்பிற்கும் மாதாந்திர குறைந்தபட்ச கட்டணம் செலுத்தப்பட வேண்டும். பின்வரும் சந்தர்ப்பங்களிலும் கூட இக்கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்:

I. மின்சாரத்தை பயன்படுத்தாமல் இருந்தாலும்


II. நீதி மன்ற ஆணையால் மின்னிணைப்பு துண்டிப்பில் இருந்தாலும்

III. மின்சாரக் கட்டணம் குறைந்தபட்சக் கட்டணத்தை விடக் குறைவாக இருந்தாலும்

**6. என்னுடைய புதிய மின்னிணைப்பு எப்பொழுது கிடைக்கப் பெறும்?**

பின்வரும் அட்டவணையின்படி உங்களுக்கு மின் வழங்கல் கொடுக்கப்பட வேண்டும். இல்லையெனில் தாமதமாகும் ஒவ்வொரு நாளைக்கும் ரூ.100 வீதம் (அதிகபட்சமாக ரூ.1000) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஈட்டுத் தொகை வழங்க வேண்டும்.

| வகை | கால அட்டவணை |
|---|---|
| அ. நீட்டிப்பு (அ) மேம்பாடு தேவைப்படாத போது | கூடுமானவரை ஒரு வாரத்திற்குள்ளும் ஆனால் 30 தினங்களுக்கு மிகாமலும் |
| ஆ. பகிர்மான மின்மாற்றி தேவைப்படாத போது | 60 நாட்கள் |
| இ. மின் மாற்றி தேவைப்படும் நீட்டிப்பு மற்றும் மேம்பாடு | 90 நாட்கள் |



## மின்சார புதிய சேவை இணைப்பை இணையத்தில் பெற

**படி-1**

- உங்களது விண்ணப்பத்தின் வகை மற்றும் புதிய சேவை / கூடுதல் மின்சுமை / மின்சுமை குறைப்பு ஆகியவற்றை தேர்ந்தெடுக்கவும்

**படி-2**

- விண்ணப்பம் மற்றும் கூடுதல் படிவங்களை சமர்ப்பிக்கவும்
- அச்சு நகல்கள் தேவையில்லை

**படி-3**

- ஒப்புகை மற்றும் விண்ணப்பத்தின் பார்வைக் குறிப்பு எண்ணுடன் பதிவுக் கட்டணத்திற்கான கேட்புத் தொகை அறிவிப்பினை பெறவும்

ஆதாரம்: தமிழ் நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (http://www.tnebltd.gov.in:8080/nsconline/)

குறிப்பு விவர பட்டியல் :

1. தமிழ்நாடு மின்சார பகிர்மான செந்தரங்களுக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)

2. மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)

3. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)

4. தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)

5. மின்சார சட்டம் 2003 (www.cercind.gov.in)

6. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இணையதளம் (www.tangedco.gov.in)

## மின் நுகர்வோர் மையங்கள் :

**Madras Metropolitan Consumer Rights Protection Centre (MMCRPC)**
No. 118, Fourth Street,
Kamaraj Nagar, Avadi,
Tiruvallur District.
Chennai - 600 071,
Phone: 044-26554434
Mobile: 9382828286 / 9486882626
Email: ecctiruvallur@gmail.com

**Tirunelveli District Consumer Rights Protection Sangam**
No. 9, Kulapirai Street,
Tirunelveli Town,
Tirunelveli - 627 006
Phone: 0462 2338544
Mobile: 94879 83160
Email: ecctirunelveli@gmail.com

**Southern Consumers Organisation for Protection & Empowerment - (SCOPE)**
No. 49, Raja Street, FCI Nagar,
Semmandalam,
Cuddalore - 607 001
Phone: 04142-233798
Mobile: 9443285555
Email: ecccuddalore@gmail.com

An initiative supported by
SHAKTI
SUSTAINABLE ENERGY FOUNDATION